| 21. | வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | 44 | -- |
| 22. | பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | 40 | -- |

பீடத்தினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப இளமானி நிகழ்ச்சி திட்ட மொத்த மாணவர் தொகை அட்டவணை 9.6ல் கீழே வழங்கப்பட்டுள்ளது

அட்டவணை 9.6 பீடத்தினால் நடாத்தப்பட்ட தொழில்நுட்ப இளமானி நிகழ்ச்சி திட்ட மொத்த மாணவர் தொகை

| பட்ட நிகழ்ச்சித்திட்டம் | பதிவுசெய்த ஆண்டு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | | 2018 | | 2019 | | 2020 | |
| | வாரநாள் | வார இறுதி | வாரநாள் | வார இறுதி | வாரநாள் | வார இறுதி | வாரநாள் | வார இறுதி |
| வலையமைப்பு | 33 | 41 | 41 | 43 | 29 | 37 | 40 | 44 |
| பல்லூடகம் மற்றும் இணையத்தளம் | 37 | 36 | 39 | 37 | 35 | 38 | 40 | 40 |
| மென்பொருட் தொழில்நுட்பம் | 39 | 40 | 33 | 40 | 31 | 32 | 40 | 40 |
| **மொத்தம்** | **109** | **117** | **113** | **110** | **95** | **107** | **120** | **124** |

## 9.3 2021ஆம் ஆண்டு பீடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகள்

2021ஆம் ஆண்டு வார நாள், வார இறுதி அணிகளுக்கு பீடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விவரம் அட்டவணை 9.7 இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 9.7 2021ஆம் ஆண்டு பீடத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகள்

| # | தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் | முதலில் பதிவு செய்த ஆண்டு | நடாத்தப்படும் முறை | அரையாண்டிறுதிப் பரீட்சை |
|---|---|---|---|---|
| 1 | மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | 2017 | வாரநாள் | 6ஆம் அரையாண்டு |
| 2 | மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | 2017 | வார இறுதி | 5ஆம் அரையாண்டு |
| 3 | மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | 2018 | வாரநாள் | 4ஆம் அரையாண்டு |
| 4 | மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | 2018 | வார இறுதி | 4ஆம் அரையாண்டு |
| 5 | மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் | 2019 | வாரநாள் | 2ஆம் அரையாண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழில்நுட்ப இளமாணி | | | |
| | பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | | | |
| 6 | மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | 2019 | வார இறுதி | 2ஆம் அரையாண்டு |
| | வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | | | |
| | பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | | | |

## 9.4 வருகைதரு விரிவுரையாளர்கள் - 2021

வருகைதரு விரிவுரையாளர்கள் மற்றம் வளவாளர்களை பீடம் கீழ்க்காணும் காரணங்களுக்காக பெற்றுக்கொள்கின்றது:

நிரந்தர கல்விப் பணியாளர்கள் பற்றாக்கறை
ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றம் உயர்கல்வி நிறுவனங்களுடன் சிறந்த தொடர்பினை ஏற்படுத்துதல்

.

அட்டவணை 9.7: 2021ஆம் பீடத்தினால் அனைத்து பட்டப்படிப்புகளுக்கும் பணியமர்த்தப்பட்ட வருகைதரு விரிவுரையாளர்கள் பற்றிய விபரம் அட்டவணை 9.8 ல் தரப்பட்டள்ளது

அட்டவணை 9.8 வருகைதரு விரிவுரையாளர்கள்

| # | தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் | முதலில் பதிவு செய்த ஆண்டு | நடாத்தப்படும் முறை | அரையாண்டு | வருகைதரு விரிவுரையாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி<br>பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி | 2017/2018 | B1 | 06 | 08 |
| | | 2017/2018 | B2 | 06 | 10 |
| | | 2018/2019 | | | |
| | | 2018/2019 | B1 | 06 | 08 |
| | | 2018/2019 | B1 | 04 | 13 |
| | | 2018/2019 | B2 | 04 | 14 |
| | | 2018/2019 | B1 | 03 | 12 |
| | | 2019/2020 | B2 | 03 | 15 |
| | | 2020/2021 | B1 | 01 | 03 |
| | | 2020/2021 | B2 | 01 | 11 |
| | | 2020/2021 | B1 | 02 | 08 |

## 9.5 தொழில்நுட்ப இளமாணிப் பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புகள்

கல்விச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட விலக்களிப்புக் கொள்கையின் அடிப்படையில் மாணவர்களுக்கு விலக்களிக்கப்பட்டது. மாணவர்கள் NVQ 6 டிப்ளோமா அல்லது அதற்கு சமமான அல்லது உயர் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே விலக்குகளுக்கு தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். மாணவர் டிப்ளோமா மட்டத்தில் சமமான பாடத்தை வெற்றிகரமாக முடித்திருந்தால் பாட அலகுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக மாணவர்கள் டிப்ளமோ கற்கைநெறியின் மூலப் பெறுபேற்று அறிக்கையை வழங்க வேண்டியிருந்தது.

விலக்களிப்பு கோரும் மாணவர்கள் இரண்டு பிரிவுகளின் கீழ் விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. முதலாம் வகுதி மாணவர்களுக்கு விரிவுரைகள், செய்முறை வகுப்புகள், அரையாண்டிறுதிப் பரீட்சை உட்பட அனைத்து மதிப்பீடுகளிலும் இருந்து விலக்களிக்கப்பட்டது. எனினும் GPA ஐ கணக்கிடும் பொருட்டு குறிப்பிட்ட பாட அலகில் அவர்களது செயற்றிறன் சாதாரண தேர்ச்சிக்குச் சமமாக கருதப்பட்டது. இரண்டாம் வகுதி மாணவர்களுக்கு விரிவுரைகள், செய்முறை வகுப்புகளில் கலந்து கொள்வதில் இருந்து விலக்களிக்கப்பட்டபோதும் அவர்கள் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளை முடித்து, அரையாண்டிறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டியிருந்தது. இதன்படி, அம்மதிப்பீடுகளில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் அவர்களின் GPA இல் கணக்கிடப்பட்டன.

மேலும், முழு அரையாண்டுகளுக்கும் விலக்குக் கோரி விண்ணப்பித்துத் தகுதி பெற்ற மாணவர்களுக்கு விலக்களிப்புக் கொள்கையின்படி முழு அரையாண்டு விலக்களிப்பு வழங்கப்பட்டது. இருப்பினும், 2020/21 மாணவர்கள் சேர்க்கையில் விலக்களிப்பிற்கு எதுவிதமான கோரிக்கைகளும் கிடைக்கவில்லை ஏனெனில் மாணவர்கள் சிறந்த தரத்தினைப் பெறுவதற்காக தங்களுடைய நிகழ்ச்சி திட்டங்களை தொடர்வதற்கு விருப்பம் கொண்டிருந்தனர்.

## 9.6 தொழில் அடிப்படையிலான தொழிற்துறைப் பயிற்சி

தொழில் அடிப்படையிலான தொழிற்துறைப் பயிற்சி என்பது தொழில்நுட்ப இளமாணி நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கியமானதும் கட்டாயமானதுமான ஓர் அங்கமாகும். ஐந்தாம் அரையாண்டில் வழங்கப்படும் இப்பயிற்சி ஆறு மாதங்களுக்கு நடைபெறும். மாணவர்கள் தேசிய தொழில்பயிலுநர் மற்றும் தொழிற்துறை பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து தொழிற்துறைகளில் அமர்த்தப்படுகிறார்கள். மாணவர்களின் தரப் புள்ளிச் சராசரி (GPA) கணிப்பில் இக்கூறு கருத்திற்கொள்ளப்படுவதால் மாணவர்களின் தொழில் அடிப்படையிலான தொழிற்துறை பயிற்சியை மதிப்பிடுவதற்கு விரிவான மதிப்பீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது.

## 9.7 பீடச் சபைக் கூட்டங்கள்

பீடக் குழுவின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டன. 2020ஆம் ஆண்டில் மொத்தம் 09 கூட்டங்கள் நடத்தப்பட்டன. கொவிட் - 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பீடக் குழுவின் அநேகமான பீடச்சபைக் கூட்டங்கள் இணையவழி முறையில் நடாத்தப்பட்டன.

## 9.8 பொதுப் பட்டமளிப்பு விழா – 2021

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவினை ஆண்டின் இறுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், கொவிட்-19 சூழ்நிலை காரணமாக அது நடைபெறவில்லை. ஆனால் குறிப்பிட்ட கல்வியாண்டிறற்கான பரீட்சை முடிவுகள், பட்டப்படிப்பிற்கு வழங்குவதற்காக பூர்திதி செய்யப்பட்டன. மேலும் பட்டமளிப்பு விழா ஏப்ரல் 2022 நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 9.9 கோவிட் 19 பரவல் சூழ்நிலையின் பொழுது பீடத்தினால் வழங்கப்பட்ட இணையவழி செயல்முறை இளமானி நிகழ்ச்சி திட்டங்கள்

மார்ச் 23, 2020 தொடக்கம் இணையவழி முறைக்கு மாறுவதற்கு தொழில்கல்வி தொழில் நுட்ப பல்கலைக் கழகம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கொவிட் - 19 பரவலால் ஏற்பட்ட முடங்கல் நிலைமைக்கு மத்தியிலும், இணையவழி கல்வியினை வழங்கிய முதலாவது பல்கலைக்கழகமாகும்.

### 9.9.1 இயக்குவதற்கான பொறிமுறை

முதலில், கூகிள் வகுப்பறை (Google classroom) சூம் (Zoom) எம்எஸ் குழு (MS Team) மூடில் (Moodle) மின்னஞ்சல் வட்அப் (Watsapp) மற்றும் பலவகையான இணையவழி தளங்களை

வழங்கலுக்காக பல்கலைக்கழகம் மேற்கொண்டது. அதன் பின்பு, எல்எம்எஸ் LMS (Moodle ) மூடில் மற்றும் சூம் (Zoom) வீடியோ கலந்துரையாடல் வசதிகளை இணையவழி கல்விக்கான கருவிகளாக மாற்றிக் கொண்டனர்.

### 9.9.2 இணையவழி கற்றல் மற்றும் கற்பித்தலுக் வழங்கப்படும் ஆதரவு மற்றம் சலுகைகள்

இணையவழி பயிற்சிநெறிகளுக்கு தேவையான பாடப்பொருடகள் (materials) மாணவர்களுக்கு LMS Moodle மூலமாக http://lms.univotec.ac.lk மூலமாகவும் சூம் வீடியோ (Zoom video) கலந்துரையாடல் வசதி மூலமாக நிகழ்ச்சி திட்ட விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.

இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பு (LEARN) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்படன் (TRCL) இணைந்து பல்கலைக்கழகத்திற்கு LMS இலவச வசதியினைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பு LEARN அமைப்பின் உறுப்பினராக பல்கலைக்கழகம் இருப்பதினால் கல்வித்துறை மறறும் மாணவர்களுக்கு சூம் வீடியோ கலந்துரையடல வசதியினை இலவசமாக வழங்கக்கூடியதாக இருக்கின்றது.

பல்கலைக்கழக கல்வியாளர்கள் மற்றும் உள்ளக மற்றம் வருகை தரும் விரிவுரையாளர்களுக்கு அவர்கள் தங்களுடைய வீட்டில் இருந்தவாறே விரிவுரைகளை வழங்குவதற்கு வசதியாக நெகிழ்வுத்தன்மை வழங்கப்படுகின்றது. முடங்கல் காலங்களில் பல்கலைக்கழகத்திற்கு வருகைதரமுடியாமல் மூடப்பட்டிருந்தாலும், இணையவழி மூலமாக கற்றலை அணுகுவதற்கு தேவையான கருவிகளை பல்கலைக்கழகம் வழங்கியது அத்துடன் செயற்பாடுகளுக்கு குறைந்தபட்ச இடையூறுகளுடன் நீண்ட காலத்திற்கு தொலைநிலையில் வேலை செய்ய அனுமதிக்கின்றது.

பல்கலைக்கழகம் ஒரு புதிய இணையதள அமைப்பினை (domain) (www.uovt.ac.lk) என்கின்ற பெயருடன் உருவாக்கி மற்றம் புதிய மின்னஞ்சல் சேவை இந்த அமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் தனித்துவத்தினை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். மேலும், மைக்றோ சொப்ர் (Microsoft)365 அறிமுகப்படுத்துகின்ற செயல்முறையில் பல்கலைக்கழகம் தற்பொழுது உள்ளது.

### 9.9.3 இணையவழி வழங்கலின் நிலைமை

முடங்கலை நீக்கியதன் மூலம் மே மாதம் 2020 நடுப்பகுதியிலிருந்து ஊழியர்கள் சுழற்சி முறையில் கடமைக்கு வருகை தரக்கூடியதாக இருந்தது. பல்கலைக்கழகமானது குறப்பிட்ட உறுப்பினர் நிறுவனங்களுக்கு இலவச தரவு அணுகல் வசதியுடன் கூடிய சூம் வீடியோ கலந்துரையாடல் வசதியினை வலுப்படுத்தி, கல்வியாளர்கள் மற்றம் மாணவர்களுக்கு இணையவழி நிகழ்ச்சித்திட்டத்தினை பெறக்கூடியதாக இருக்கின்றது.

உயர் கல்வி அமைச்சின் பரிந்துரைகளின்படி, இறுதி ஆண்டு மாணவர்களுக்கான தேர்வுகள், சுகாதார வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டபடி கடுமையான சுகாதாரம் மற்றம் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் 11 யூலை 2020 முதல் தொடங்கியது. அரசாங்கத்தின் ஒழுங்கு மற்றம் விதிமுறைகளை கடைப்பிடித்து தேர்வுகளுக்கு முன்னரிமை வழங்கும் வகையில் பல்கலைக்கழகத்தினை மீண்டும் திறப்பதற்குரிய சாத்தியத்தினை பல்கலைக்கழகம் எதிர்பார்க்கின்றது.

### 9.9.4 நிகழ்ச்சிதிட்டங்களை இணையவழி மூலமாக வழங்குவதிலுள்ள வெற்றியின் நிலை.

இணையத்தினை அணுகுதல்,கணணிகள் மற்றம் ஸ்மாட் போன்களின் (Smart Phone) இருப்பு மற்றம் பொருளாதார தடைகள் போன்றவற்றில் ஏற்றதாழ்வுகள் இருந்தன. இணையவழி கற்றல்களுக்கான பொருட்களை குறித்த நேரத்தில் பெறமுடியாத மாணவர்களுக்கு சலுகை அளிக்கும் வகையில்,இணையவழி மதிப்பீடுகள் கட்டாயம் ஆக்கப்படவில்லை. சூம் (Zoom) வழியிலான விரிவுரகளின் பதிவுகளை மாணவர்களுக்கிடையில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் பீடாதிபதியின் அலுவலகத்தில் சேமித்து வைக்கப்படுகின்றன.

இணையவழி படிப்புகளை பயன்படுத்தவதற்கு தொழில்நுட்ப சிக்கல்கள் தடையாக உள்ளன. கற்பித்தல் மற்றும் கற்றலை மேம்படுத்தவதற்கு கல்வியில் ரீதியாக அர்த்தமள்ள வகையில் புதிய தொழில்நுட்பத்தினை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் டிஜிட்டல் (digital) இடைவெளி காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. தொழில்நுட்ப பிரச்சனைகளை சரிசெய்ய ஆசிரியர்கள் அடிக்கடி சிறிது நேரம் ஒதுக்க வேண்டியுள்ளது. மற்றும் உள்ளடக்கத்தினை திருத்துவது ஒரு சிக்கலான மற்றும் நேரத்தினை செலவழிக்கும் ஒரு செயற்பாடாக மாறுகின்றது.

மேலேயுள்ள சவால்களுக்கு மத்தியில் ஒட்டுமொத்த மாணவர்கள் பங்களிப்பில் மற்றும் இணையவழி வழங்கலில் 60% வீதத்திற்கு அதிகமான வெற்றியினை பல்கலைக்கழகம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

### 9.9.5 பட்டப்படிப்பு நிழ்ச்சி திட்டத்திற்கான நான்காம் ஆண்டு

நான்காம் ஆண்டினை அறிமுகப்படுத்துவது என்பது ஆர்வமள்ள மாணவர்கள் நான்கு ஆண்டுகள் பட்டப்படிப்பினைத் தொடர அனுமதிக்கும் ஒரு பெரிய சாதனையாகும். இருப்பினும், 3ம் ஆண்டின் வெளியேற்றம் அனுமதிக்கப்ப்டுகின்றது, அதே நேரத்தில் மாணவர்கள் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வதற்கு பிறிதொரு நேரத்தில் மீண்டும் சேர்வதற்கு அனுமதிக்கின்றது. இது பல மாணவர்களுக்கு உயர் படிப்பிற்கு விண்ணப்பிக்க வழி வகுக்கின்றது.

# 10 பணியாளர்கள் மேம்பாட்டு மையம்

குறுகிய கால தொழில்துறை மேம்பாட்டத் திட்டம், பயிற்சியாளர்களுக்கான பயிற்சி,மதிப்பீட்டாளர்களின் பயிற்சி ஆகியவற்றிற்கான நிகழ்ச்சி திட்டங்கள் போன்றவை தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) பகுதியின் தேவையின் அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. இவைகள் பல்வேறு தொழில்துறைகளின் பணியாளர்கள் மற்றும் TVET ன் கற்பித்தல் மேம்பாட்டிற்களா வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த திட்டங்கள் சிறிய அளவிலான பயிற்சி திட்டங்களாக இருந்தாலும், மிகவும் நடைமுறைசார்ந்த பயிற்சி திட்டமாகவாகவும் வேலையின் உண்மையான சூழலை அனுபவிப்பதற்கான வாய்ப்புக்களையும் வழங்குகின்றது.

கோவிட் 19இன் எதிர்பாராத சூழ்நிலைகளின் காரணமாக, கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மட்டுமே இதன் தாக்கத்தினை எதிர்பார்க்க முடிந்தது.மற்றம் தனிமைப்படுத்தல், இடைவெளி பேணுதல் மற்றம் அவ்வப்போது ஏற்படும் தடங்கல்களினால் பணியாளர் மேம்பாட்டு மையம் விரும்பியளவு முன்னேற்றத்தினை அடைய முடியவில்லை. பல்கலைகடகழகம் சில சமயங்களில் மூடப்பட்டிருந்தது. முற்றம் நேரடியான தொடர்புகள் கட்டுப்படுத்தப்பட்டதாகியது. இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் ப.மே.மை முடிந்தவரை ஓரளவு கீழ்க்காணும் முடிவுகளை அடையக்கூடியதாக இருந்தது.

அடடவணை 10.1 உயர் தேசிய டிப்ளோமா விபரங்கள்-2020

| | செயற்பாடு | முன்னேற்றம் / எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | கருத்தக்கள் / நிலைமை காலக்கெடு(கள்) |
|---|---|---|---|
| 1 | தேசிய திறன், தரநிலைகளளின் மேம்பாடு மற்றும் திருத்தம் மற்றும் NVQ 5 மற்றும் 6 க்குரிய பாடநெறிகளின் கல்வித்திட்டம் . | அக்டோபர் 13, 2020 வரை உள்ள படிப்புக்களின் எண்ணிக்கை (ஜனவரி 2019 முதல் பின்னடைவு) 32<br>படிப்புகள் முடித்து TVEC க்கு அனுப்பப்பட்டது –14<br>TVEC ஆல் திரும்பப் பெறப்பட்டது – 1<br>புதிதாகப் பெறப்பட்டவை – 1<br>கைவசமுள்ள மொத்த படிப்புகளின் எண்ணிக்கை - 18 | முடிவு திகதி<br>20 டிசம்பர் 2021 |
| 2 | பயிற்சி நிலைய மேலாண்மை உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி(உள்வாங்கல்1) NVQ 6 | குற்கைநெறி தொடங்கியது – டிசம்பர் 2020 தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது (ஒரு மாதத்தில் 3 நாட்கள் இணையவழி) 70% நிறைவு செய்யப்பட்டுள்ளது.<br>திட்டமிடப்பட்டுள்ள நிறைவு – டிசம்பர் 2021 (சாத்தியமில்லை)<br>பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை – 32 29 ஆக குறைக்கப்பட்டுள்ளது)<br>ஒதுக்கப்ட்டுள்ள நிதி - ரூபா. 2 மில்லியன்<br>செலவழிக்கப்ட்டுள்ள நிதி - ரூபா.252,826 – முக்கியமாக இணையவழி பயன்முறை காரணமாக பரீடசைகள் - (அரையாண்டு 1 மற்றும 2) மாற்று மதிப்பீட்டு முறையில் நடைபெறும் | டிசம்பர் 2021 |
| 3 | தொழிலநுட்ப ஆசிரியர் கல்விக்கான தேசிய டிப்ளோமா கல்விநெறி NVQ5 . | கற்கைநெஙி 2019இல் தொடங்கியது சகல பரீட்சைகளும் 2020இல் நிறைவுசெய்யப்ப்பட்டது NVQ 5 மதிப்பிடுகள் மற்றும் மீள் பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன.<br>படிப்பினை முடித்த மாணவர்களின் எண்ணிக்கை - 52 | |
| 4 | மதிப்பீட்டாளர்கள் திட்டத்திற்கான பயிற்சி(TOA) | இந்த குறுகிய காலபயிற்சிக்கு பயிறிசயாளர்களுக்கிடையில் கலநடதுரையாடல் மற்றும் பயிற்சி பட்டறைகள் தேவைப்படுகின்றன. | |

| | | | |
|---|---|---|---|
| | | அது கொவிட் 19 கட்டுப்பாடுகள் காரணமாக முடியாதிருக்கின்றது. | |
| 5 | டிப்ளோமா விசேட இணையவழி மீள் பரீட்சை (NITESL) | இந்த பரீட்சைதொடர் 2014 முதல் மிகவும் சிறப்பாக உள்ளது. பரீடசை அறவித்தலுக்கு பதிலளிக்கும் வகையில் UoVT 80 விண்ணப்பதாரர்களைப் பெற்றுள்ளது டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் 12 சான்றிதழ் படிப்பிற்கான எண்ணிக்கை – 2<br>கற்கை நெறிக்கான இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br>பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் 52<br>மாணவர்களின் பட்டியல், மற்றம் இணைப்பாளர்கள் பட்டியல்,கேள்வித்தாள்<br>தயாரிப்பவர்கள்,மதிப்பீட்டாளர்கள் மற்றும் பரீடசைக்கு புள்ளிகள் வழங்குபவர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்- ஆகஸ்ட 2021<br>தொகுதிகளின் எண்ணிக்கை - 62 | இது நவம்பர் 1 முதல் டிசம்பர் 2 வரையிலான ஒரே தடவையிலான இறுதி சிறப்பு இணையவழி மற்றும் தளத்தில் நடக்கின்ற மீள் பரிட்சை ஆகும். இணையவழி பிரச்சினைகள் கொண்ட மாணவர்கள் தளத்தில நடக்கின்ற பரீட்சைக்கு கோரிக்கையின் பேரில் பங்கு பற்றலாம் மாணவர்களுக்கான விளக்கவுரை முடிக்கப்பட்டுள்ளது. அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. தேர்வு நடைமுறை தேர்வு நடைமுறைகள் பணியாளர்களுககும் மாணவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மார்கழி 2021 |
| 6 | 2021ம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட வலைப்பக்கங்கள (Webinar) அமர்வுகள் | 3.1 TVET ஆசிரியர்களுக்கு ஐந்து நாட்கள் அமர்வு யூலை 15 2021 முதல் யூலை 27 2021 வரை இணையவழி மூலமாக கற்பித்தல சம்பந்தமாக நடாத்தப்பட்டது.<br>3 நாடகள் கொண்ட காலம் முடிவடைந்துள்ளது. (யூலை 2021)<br>சூம் வழியாக பதிவு செய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் - 151<br>3.2 ஆகஸ்ட் 5 2021 அன்று ஆராய்ச்சியிலிருந்து வெளியீடுகள் வரை ஆராய்ச்சியாளர்கள் எவற்றினைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற தலைப்பில் வலையமைப்பு வழியாக நடைபெற்றது.<br>சூமில் பதிவு செய்யப்பட்ட பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை – 78<br>3.3 தேசிய திறன் தரநிலைகள் மற்றம் பாடத்திட்ட மேம்பாட்டு இணையவழி பயிற்சி திட்டம் ஜனவரி 25 முதல் பெப்ரவரி 12 2021 வரை TVEC யுடன் இணைந்து செயற்படுத்தப்பட்டது.<br>7 நாட்கள் காலம் - பெப்ரவரி 2021 முடிவடைந்தள்ளது | பொருத்தமற்றது |
| 7 | கட்டணம் அறவிடும் பயிற்சிநெறிகள் | BOG ஆல் அங்கிகரிக்கப்பட்ட கட்டணத் திட்டம் SDC இன் கீழ் கணிய அளவையாளர் ஆசிரியர் பயிற்சிக்கான சான்றிதழ் படிப்பினை ஆரம்பிக்க தொடங்குதல் விண்ணபத்திற்கான இறுதிநாள் ஒக்டோபர் 30, 2021 | விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன தெரிவு செய்தல் டிசம்பர் 2021<br>ஆரம்பம் பெப்ரவரி 2022 |
| 8 | SSDP நிதியினால் வழங்கப்படும் முதுகலை படிப்புகள்<br>(ரூபா. 30 மில்லியன்) | TVEC நிறுவனத்தின் பயிற்சியாளர்கள் எண்ணிக்கை – முதுநிலை மற்றும் கலாநிதி பட்டம்) 32<br>பயிற்சிகள் முடிவடைந்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டது – 12<br>கற்கை நெறிகள் திரும்பப் பெறப்பட்டு கட்டணம் திரும்பப் பெறப்பட்டது – 4<br>முடிப்பதற்கு நிலுயிலுள்ளது – 15<br>முன்னேற்றத்தின் மதிப்பாய்வு செய்யவும் , மற்றும் பிரச்சனைகள் அத்துடன் அவற்றினை எவ்வாறு | பொருத்தமற்றது |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்ப்பதற்கு வழி வகைகளை கலந்துரையாடவும் கூட்டம் மார்ச் 8, 2021 மற்றும் மார்ச் 19 திகதிகளில் நடைபெற்றன.<br>விண்ணப்பதாரர்கள் அறிக்கையடுவதற்கு இறுதி நாள் ஏப்ரல் 30 2021<br>SDC முன்னேற்றத்தினை அறிக்கையிட்டு மற்றும் SSDP அமைச்சுடன் தீர்மானித்து பணத்தினை மீளப் பெறுவதற்கான உத்தரவினை அல்லது வேறு ஏதாவற்றினை பரீட்சையாளர்களுக்கு வழங்க அறிவுறுத்தலை வழங்கல் | |
| 9 | முன்னைய ஆண்டினைத் தவிர்த்து அடுத்த ஆண்டிற்கான அனுமதி திட்டம் | கல்வி சபையின் அனுமதி மார்ச் 2021 இல் பெறப்பட்டது. ஆளுனர் சபை யூலை 21இல் ஒப்புதல் அளித்தது. இணைய அறிவித்தல் மூலமாக பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது துறைத் தலைவர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது. நிறுவனங்களை அணுகுவதற்கான ஒழுங்குகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | ஒவ்வொரு துறையும் அதற்கான வாய்ப்பு இருக்கும்பொழுது, சம்பந்தப்பட்ட அமைப்புகளை அணுகும் |
| 10 | வெளிப்புற ஒத்துழைப்பு . பரஸ்பர ஒப்பந்தங்கள்/கல்விசார் கூட்டாண்மைகளில் அனுமதி பெறுவதற்கு காத்திருப்பவர்கள் | • இல்கை கணிய அளவையாளர் நிறுவனம் (முறையான பரஸ்பர ஒப்பந்தத்திற்கு செல்வதற்கு முன் கட்டமைப்பிற்கான இறுதி ஒப்பந்தத்திற்காக காத்திருக்கின்றது) இரு செய்ற்படாத வடிவிலுள்ளது.<br>• DIMO கலைக்கூடம் 9 மார்ச் 2021 அன்று ஆரமப விளக்கக்காட்சி (ஜேர்மனியில் Meister NVQ ஒரு முன்மொழிவு, பாடத்திட்டம்,அங்கிகாரம் ஆகியவற்றினை DIMO சமர்ப்பிக்க வேண்டும். DIMO முன்மொழிவிற்காக காத்திருக்கின்றது<br>• துணிகள் (textiles) மற்றும் ஆடை தொழில்நுட்பத்தில்B.Tech இல் கூட்டுப் பட்டபடிப்பிற்காக துணிகள் மற்றம் ஆடைகள் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான முன்முயற்சிகள்<br>• சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் மேலாண்மையில் B.Tech கூட்டுப்பட்டப்படிப்பிற்காக சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் மேலாண்மை நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான முன்முயற்சிகள்<br>• தோட்ட மேலாண்மையில் B.Tech கூட்டுப்பட்டப்படிப்பிற்காக தோட்ட மேலாண்மை நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான முன் முயற்சிகள்<br>• சிங்கப்பூரின் லிதன் வணிகமுறை மற்றும் UoVT உடன் முன்மொழியப்பட்ட பங்குடமை அமைச்சிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.<br>• ஷங்காய் நன்ஹு தொழிற்கல்வி மற்றும் தொழிலநுட்ப பல்கலைக்கழகத்திற் கிடையே முன்மொழியப்பட்டள்ள ஒத்துழைப்பு<br>• ஆமைச்சு கூட்டம் ஒக்டோபர் 15 2021 மற்றும் வரைவு முன்மொழிவு அக்டோபர் 17,2021அன்று அனுப்பிவைக்கப்பட்டள்ளது.<br>• கொழும்பு திட்ட பணியாளர் கல்லூரி-மணிலா UoVTஇன் சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் இணைப்பங்காளராக அழைப்பினை ஏற்றுக்கொண்டது. | மார்ச் 2022 |

| | | | |
|---|---|---|---|
| | | • உலகளாவிய TVET துறையில் கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் வளங்களைப் பரிமாறிக்கொள்ள UoVT உடன்கொழும்பு திட்ட பணியாளர்கல்லூரி மணிலா புரிந்துணர்வு ஒப்பந்தம்<br>• பீட்டர் தி கரேட் செயின்ட் பீட்டர்ஸ்பார்க் பாலிடெக்னிக் பல்கலைக்கழகம் கலந்துரையாடல் இனிமேல் தொடங்கப்படவேண்டும் | |
| 11 | வழக்கமான கூட்டங்கள் | NVQ வழிநடத்தல் குழு கூட்டம் (TVEC)<br>மாதாந்த பாடத்திட்ட மேம்பாட்டு முன்னேற்றக்கூட்டம் (TVEC)<br>மாதாந்த பணியாளர்கள் கூட்டம் (SDC)<br>SDCஇன் நிர்வாக குழு கூட்டம் ஜனவரி 25 2021 (3 மாதங்களுக்கு ஒரு முறை நடைபெற்றது<br>SSDP முன்னேற்றக் கூட்டம் (SSDP அலுவலகம் - அமைச்சு | பொருத்தமற்றது |
| 12 | நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன<br><br>- | இயக்குனர – SDC – பேராசிரியர் சந்தன ஜயலத்<br>13 ஒக்டோபர் 2020 SDC இன் நிர்வாககுழு நியமிக்கப்பட்டது<br>10 ஜனவரி 2021 பதில் உதவிப்பதிவாளர் – திருமதி.இனோஷா பெதுருஹேவா – 1 ஜனவரி 2021 - இனிமேல் சேவை செய்யமாட்டார்<br>பாடத்திட்ட மேம்பாட்டுத் தலைவர் - திருமதி.யமுனா மனதுங்கா -2 பெப்ரவரி 2021<br>பயிற்சிக்கான தலைவர் தேவையில்லை (நிதி இல்லை)<br>செல் உறுப்பினர்கள்<br>பேராசிரியர் சந்தன ஜயலத் (பயிற்சி) – 2 மில்லியன் ரூபா. இலக்கு செப்டம்பர் 30க்கு முன்பு செலவு செய்ய வேண்டும்<br>கலாநிதி.டி.டி.டி.சுரவீர (புதுமையான திட்டங்கள் ) 4 மில்லியன் ஒதுக்கீடு – 30 ஒக்டோபர் 2021க்கு முன் செலவு செய்யவேண்டும்<br>கலாநிதி.ஜெயலால் வெத்தசிங்க- (முதுநிலை பட்டதாரி படிப்புகள்) 1 மில்லியன் 30 ஒக்டோபர் 2021க்கு முன்பு செலவழிக்க வேண்டும்<br>குறிப்பு – மே 2021இல் SSDP க்கு சமர்ப்பிக்கப்பட்ட புதுமையான திட்ட முன்மொழிவுகள் கொவிட் 19 காரணமாக தொடர முடியவில்லை) | பொருத்தமற்றது |
| 13 | தேர்வு மற்றும் ஒழுங்குமுறை சட்டமுறைகள் சம்பந்தமான இணையவழி அமர்வு | பங்கேற்பாளர்கள் ஏற்கனவே ஒதக்கப்பட்டுள்ளது<br>UoVTஇன் அனைத்து கல்வி ஊழியர்களுக்குமானது<br>காலஅளவு – 2 நாட்கள் ( ஒவ்வொன்றும் 3 மணி நேரப்படி) ஜனவரி 2022இல் | ஜனவரி 2022 |

# 11 அனுமதி, அங்கீகாரம் மற்றும் தர உத்தரவாதப் பிரிவு (யுயுஞயு)

## 11.1 அறிமுகம்

அனுமதி, அங்கீகாரம் மற்றும் தர உத்தரவாதம் ஆகியவற்றின் பிரிவுகளின் முக்கிய பணியானது தேசிய பல்கலைக்கழக அமைப்பில் பல்கலைக்கழக மானியக்குழுவினால் செயற்படுத்தும் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதாகும் கொவிட் 19 தொற்றுநோய் பரவலினால் ஏற்பட்ட இடர்களுக்கு மத்தியிலும் பிரிவு அதேபோன்று பல்கலைக்கழகம் சில காத்திரமான நடவடிக்கைகளை நேர்மறையான திசையில் எடுத்துச் சென்றுள்ளன.

## 11.2 மாணவர் சேர்க்கை

2020ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட தொற்றுநோய் பரவல் சூழ்நிலை காரணமாக 2020 ஆண்டு கல்வி நிகழ்ச்சிதிட்டத்திற்கான மாணவர் சேர்க்கை தாமதத்துடன் மார்ச் 2021 ஆரம்பிக்கப்பட்டது.
2021 ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை யூலை 2021 விளம்பரப்படுத்தப்பட்டது மற்றும் விண்ணப்பங்களை ஏற்கும் காலஎல்லை, அந்த காலப்பகுதியில் விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அக்டோபர் 31 வரை நீடிக்கப்படவேண்டியிருந்தது. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதில் எதிர்கொண்ட பலசிக்கல்களை தீர்ப்பதற்காக ஒரு இணையவழி தளம் (portal.uovt.ac.lk) உருவாக்கப்பட்டது மற்றும் அது இதுவரை ஒரு பெரிய வெற்றியாக இருக்கின்றது. திறனறிவு தேர்வும் 19 டிசம்பர் 2021 அன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டது மற்றும் மாணவர்களின் சேர்க்கை செயற்பாடு தற்பொழுது நடந்து வருகின்றது.
இதற்கு மேலாக ஏற்கனவே பட்டம் பெற்றவர்களுக்கான ஒரு புதிய நான்காம் ஆண்டு நிகழ்ச்சி திட்டமானது சிறப்பு/அதி விசேட (Honours) பெறாமல் சாதாரண பட்டம் பெற்ற மாணவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்கும் முகமாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. நான்கு வருட பட்டப்படிப்பிற்கான முதலாவது உள்வாங்கல் 2022ம் ஆண்டளவில் தொடங்கவுள்ளது.

## 11.3 அங்கீகாரம்

பொறியில் தொழில்நுட்ப பீடத்தின் நான்கு பட்டப்படிப்புகளும் 2022ம் ஆண்டிற்குள், இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் ஊடாக Sydney accord அங்கீகாரத்திறகு விண்ணப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. நிறுவனத்திற்கு இறுதி சமர்ப்பினை மேற்கொள்வதற்கு முன்பு அதனை மீளாய்வு செய்வதற்காக ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.
கணிய அளவீட்டில் இளமானி தொழில்நுட்ப பட்டப்படிப்பிற்காக, இலங்கையிலுள்ள கணிய அளவையாளர்கள் நிறுவனத்தின் அங்கீகாரத்திற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் தற்பொழுது செய்யப்பட்டு வருகின்றன.

## 11.4 தர உத்தரவாத கட்டமைப்பு

### 11.4.1 சுருக்கமான தர உத்தரவாதக் கட்டமைப்பு

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒரு தர உத்தரவாதக் கட்டமைப்பை கொண்டுள்ளது.

அக்கட்டமைப்பின் அம்சங்களும் செயற்பாடுகளும் பின்வரும் விடயங்களில் பல்கலைக்கழகத்தின் தரத்தை உறுதிப்படுத்துகின்றன:

I. பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கான சட்டத் தேவைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் தரத்தில் காணப்படல்
II. பௌதிக வளங்களின் தரம்
III. பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரம்
IV. பல்கலைக்கழக ஆசிரியர்களின் தகுதிகளும் தகைமைகளும்
V. ஆய்வு நடவடிக்கைகள்
VI. கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் முறை
VII. மதிப்பீட்டு நடைமுறைகள்
VIII. மாணவர் நலன்புரி

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் 2008ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் தன்னிறைவானதாக உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும் அதன் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் குறிப்பிட்டிருப்பது போல ஓர் பட்டம் வழங்கும் நிறுவனமாக அனைத்துச் சட்டத் தேவைப்பாடுகளையும் கொண்டுள்ளது.

2008ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இப்பல்கலைக்கழகமானது இலங்கையில் காணப்படும் ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களைப் போலவே சட்டம், கல்விசார் அந்தஸ்தைக் கொண்டுள்ளது. பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டதும் 1992.03.13ஆம் திகதியிடப்பட்டதுமான 16/92ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 6, 7ஆம் பிரிவுகளின்படி, வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின்கீழ் காணப்படும் பல்கலைக்கழகங்களாலும் பொதுநலவாயப் பல்கலைக்கழகங்களின் சங்கங்களின் பட்டியலில் மற்றும் / அல்லது சர்வதேச பல்கலைக்கழகக் கையேட்டில் பட்டியலிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களாலும் வழங்கப்படும் பட்டங்களுக்குச் சமமானதாகும்.

தேவையான நிர்வாகக் கட்டடத் தொகுதி, விரிவுரை மண்டபங்கள், நூலகம், ஆய்வுகூடங்கள், கலையரங்கம், சிற்றுண்டிச் சாலை, விடுதிகள் முதலான தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டுள்ளதோடு பல்கலைக்கழக வளர்ச்சியின் தேவைக்கேற்ப அவை மேலும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரம், பல்கலைக்கழகத்தின் தலையாய இலக்கு என்பவற்றை இந்த ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள தர உத்தரவாதக் கட்டமைப்பின் மொத்த செயற்பாடுகளும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்டமானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் முகமாக பல்கலைக்கழகப் பணியாளர்கள் யாவர் அவர்களது பொறுப்புகள் எவை என்பது பற்றியும் நிர்வாக குழுக்கள் பற்றியும் குறித்துரைக்கிறது. இந்நிர்வாக குழுக்கள் இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் நிர்வாகக் குழுக்களுக்கும் சமமானதாகவும் மற்றும் எவ்விதத்திலும் வேறுபடவில்லை.

பல்கலைக்கழகப் பணியாளர்கள்

I. துணை வேந்தர்
II. பீடாதிபதிகள்
III. பணிப்பாளர் நாயகம்
IV. நிதிப் பணிப்பாளர்
V. ஊடகம், தகவற் பணிப்பாளர்
VI. அனுமதி, அங்கீகாரம், தர உத்தரவாதப் பணிப்பாளர்

நிர்வாகக் குழுக்கள்

I. ஆட்சிச் சபை
II. கல்விசார் பேரவை
III. அனுமதி, அங்கீகாரம், தர உத்தரவாத சபை
IV. பீடச்சபைகள் (மேற்குறித்த சபைகளின் அமைப்புத் தொடர்பாக குறித்த சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது)

தேவையான தரம் எவ்வாறு உறுதி செய்யப்படுகிறது என்பதை விளக்குவதற்கு இச்சபைகளின் செயற்பாடுகள் இங்கே சுருக்கமாக விவரிக்கப்படுகின்றன. கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்பப் பயிற்சிப் பீடம், தொழிற்துறை மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பீடம் ஆகிய இரண்டு பீடங்களின் கீழ் நடத்தப்படுகின்றன. பாட அலகுகள், அவை வழங்கப்படும் முறை, பரீட்சைகள், மதிப்பீடு போன்றவற்றை உள்ளடக்கிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் பீடச் சபைகள் கலந்தாலோசித்துக் கண்காணிக்கின்றன.

பீடச் சபைகளில் எடுக்கப்படும் பரிந்துரைகளும் முடிவுகளும் கல்விப் பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். கல்விப் பேரவை சூழ்நிலையையும் அப்பரிந்துரைகள், முடிவுகளின் கனதியையும் பொறுத்து ஆளுநர் குழுவின் ஒப்புதலைப் பெறலாம். கல்விப் பேரவை என்பது அதன் கட்டமைப்பு, செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் இலங்கையில் உள்ள மரபார்ந்த பல்கலைக்கழகங்களிலுள்ள மூதவைக்கு ஒப்பானதாகும்.

மாணவர் அனுமதி நடைமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்களின் அங்கீகாரம், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள் தொடர்பான கல்வி மற்றும் நிர்வாக விடயங்கள், பல்கலைக்கழகத்தின் பொதுவான தர உத்தரவாதச் செயல்முறைகள் பற்றிய முடிவுகளை எடுக்கும்போது அம்முடிவுகள் அனுமதி, அங்கீகாரம் மற்றும் தர உத்தரவாத சபையின் ஒப்புதலுக்காக அனுப்பப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு நிலையம் ஒன்று காணப்படுகின்றது. பரீட்சைகளை நடாத்துதல், கண்காணித்தல், விடைத் தாள்களைத் திருத்துதல், பெறுபேறுகளைப் பதிவு செய்தல், சான்றிதழ்களை வழங்குதல் ஆகியவற்றுக்கு இந்நிலையமே பொறுப்பாகும். இந்த நடைமுறைகள் இலங்கையில் உள்ள மற்ற பல்கலைக்கழகங்களின் நடைமுறைகளை ஒத்தவையாகும்.

பல்கலைக்கழகத்தில் தர உத்தரவாதக் குழு ஒன்றும் காணப்படுகிறது. இக்குழு மாதந்தக் கூட்டங்களை நடாத்தி கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் விதிகள், நியமங்களுக்கு அமைவாக நடத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளையும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான வசதிகளையும் மாணவர் நலன்புரிச் சேவைகளையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளையும் முன்னெடுக்கிறது. மேலும், இத்தர உத்தரவாதக் குழுவால் மாதாந்த முன்னேற்ற அறிக்கை ஒன்றும் கல்விப் பேரவைக்கு அனுப்பப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட அதிகாரிகளினதும் நிர்வாகக் குழுக்களதும் அனைத்து செயற்பாடுகளும் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்கள், விதிமுறைகள், விதிகள், நடைமுறைகள் மற்றும் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

மேற்குறித்த ஆவணங்கள் உள்ளடக்கும் விடயங்கள் கீழே தரப்படுகிறது

**துணைச் சட்டங்கள்**

- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள் மற்றும் உயர் பட்டங்கள் தொடர்பான துணைச் சட்டம்.
- பரீட்சைகளை நடாத்துதல், குற்றங்கள், தண்டனைகள் மற்றும் மேல்முறையீட்டு நடைமுறைகள் நடத்துவதற்கான தொடர்பான துணைச் சட்டம்.
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர் பேரவைக்கான துணைச் சட்டம்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் விடுதிகள் மற்றும் மாணவர் ஒழுக்கம் தொடர்பான துணைச் சட்டம்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் தொடர்பான துணைச் சட்டம்

- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு நடைமுறை பற்றிய துணைச் சட்டங்கள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கீழ் நிறுவப்பட்ட பல்கலைக்கழக கல்லூரிகளின் டிப்ளோமா வழங்கும் விழாவின் நடைமுறை பற்றிய துணைச் சட்டங்கள்

**ஒழுங்குமுறைகள்**

- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்பத்தில் இளங்கல்விமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்ப இளமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் தொடர்பான ஒழுங்குமுறைகள்

**விதிகள்**

- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்பத்தில் இளங்கல்விமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான விதிமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழிற்றுறைசார் மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான விதிமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான விதிமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விதிமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் விதிமுறைகள்

**நடைமுறைகள்**

- நடைமுறை – அனுமதி நடைமுறையும் பதிவுசெய்தலும்
- நடைமுறை – விலக்களிப்புகள்
- நடைமுறை – விடைத்தாள்களின் பெறுபேறுகளை மீளாய்வுசெய்தல்
- துறை மட்டத்தில் வெளியிடப்படும் பரீட்சை முடிவுகளுக்கான நடைமுறை

**கொள்கைகள்**

- பணம் மீளச்செலுத்தும் கொள்கை

# 12 ஸ்தாபனப் பிரிவு

ஸ்தாபனப் பிரிவு பல்கலைக்கழகத்தின் மிக முக்கியமான பிரிவுகளில் ஒன்றாகும் மற்றும் இந்த பிரிவானது பல்கலைக்கழகத்தின் கல்வி, கல்வி சாரா ஊழியர்களின் மனிதவள முகாமைத்துவ விடயத்தில் பல்கலைக்கழகத்துக்கு உதவுகிறது. இப்பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன,

- பணியாளர்கள் தேவை (cadre) பற்றிய விபரங்கள்
- பல்கலைக்கழகத்தின் வருடாந்த பணியாளர்கள் தேவை பற்றிய திட்டமிடல்
- வெற்றிடங்களை நிரப்புவதற்கான அறிவித்தல்கள்
- ஆட்சேர்ப்பு / திறமையானவர்களை உள்வாங்கல்
- இழப்பீட்டு முகாமைத்துவம்
- வருடாந்தச் செயற்திறன் மதிப்பீடு
- விடுமுறை மற்றம் விருது வழங்கல் குமக்களை ஒருங்கிணைத்தல்
- மனித வளம் மற்றும் திறன் விருத்தி
- பணி நிறைவு சலுகைகள் முகாமைத்துவம்

இந்த பிரிவு அனைத்து கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களுடன் நெருற்கிய உறவினைப் பேணி வருகின்றது அத்துடன் பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள மனித வளங்களின் உச்சப் பயன்பாட்டையும் இப்பிரிவு உறுதி செய்கின்றது.

## 12.1 புதிய ஆட்சேர்ப்புகள் - 2021

பல்கலைக்கழகத்திற்கான ஊழியர்களை நியமிக்கும் அதிகாரம் ஆட்சியாளர் சபைக்கே காணப்படுகிறது. குறித்த சபையின் ஒப்புதலுடன் 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள் வருமாறு,

அட்டவணை 12.1: புதிய ஆட்சேர்ப்புகள் - 2021

| # | பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 1. | செல்வி D. பவளமலர் | செய்முறை விரிவுரையாளர் (தற்காலிகம்) | 19-04-2021 |
| 2. | செல்வி.K.N.விஜேசேகர | செய்முறை விரிவுரையாளர் (தற்காலிகம்) | 19-04-2021 |
| 3. | செல்வி.H.M.I.S.K.ஹேரத் | இணை அலுவலர் | 21-04-2021 |
| 4. | செல்வி.D.H.U.ஹேமதிலக | உதவிப் பதிவாளர் | 22-04-2021 |
| 5. | செல்வி.J.a.E.C.ஜெயவர்த்தன | விரிவுரையாளர (தகுதிகாண்) | 21-06-2021 |
| 6. | திரு.A.T.அபேசுந்தர | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 21-06-2021 |
| 7. | திரு.G.A.N. சம்பத் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 21-06-2021 |
| 8. | திரு.H.A.D.மடுஷங்க | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 21-06-2021 |
| 9. | திரு.H.K.J.பிரதீபாமாலி | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 21-06-2021 |
| 10. | திரு.H.N.W.குணசேகர | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 21-06-2021 |
| 11. | செல்வி.K.TP.C. சோமரட்ண | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 21-06-2021 |
| 12. | செல்வி.Y.W.M.காசியபானீ | உதவிப் பதிவாளர் | 05-08-2021 |
| 13. | செல்வி. W.A.K.பெரேரா | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (ஆய்வுகூடம்) | 05-08-2021 |




உருவம் - 12.1 - ஆட்சேர்ப்புக்கள் சுருக்கம்

பல்கலைக் கழகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் தொகையாக 56 கல்விசார் பணியாளர்களையும் 150 கல்விசாரா பணியாளர்களையும் கொண்டுள்ளது. 2021ம் ஆண்டில்

வெற்றிடமாக உள்ள 40 பணியாளர்கள் தொகையில் 13 எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் நிரப்பப்பட்டன.

## 12.2 2021ஆம் ஆண்டு நிகழ்ந்த பதவி விலகல்கள் / பதவி வறிதாக்கங்கள் / ஒப்பந்த முடிவுறுத்தல்கள் / ஓய்வுகள்

வெவ்வேறு பதவிநிலைகளிலிருந்த 04 பணியாளர்கள் பல்கலைக்கழகத்தின் சேவையிலிருந்து விலகுவதற்காக தங்களுடைய பதவி விலகலினை வழங்கியிருந்தனர் அதே நேரத்தில் 02 பணியாளர்கள் அவர்களுடைய ஒப்பந்த காலத்தினை நிறைவு செய்திருந்தனர் மற்றும் ஒரு தகுதிகாண் நிலை பணியாளர் அவருடைய பதவி நீடிப்பிறகு தேவையான முதுகலை பட்டப்படிப்பினை நிறைவேற்றாத காரணத்தினால் அவருடைய சேவை நிறுத்தப்பட்டது. இது பற்றிய சுருக்க விபரம் அட்டவணை 12.2இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 12.2: 2021ஆம் ஆண்டு நிகழ்ந்த பதவி விலகல்கள் / பதவி வறிதாக்கங்கள் / ஒப்பந்த முடிவுறுத்தல்கள் / ஓய்வுகள்

| | பெயர் | பதவி | நியமனத் திகதி | பதவி விலகிய திகதி | காரணம் |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.D.H.U,ஹேமதிலக | உதவிப்பதிவாளர் | 22-04-2021 | 05-07-2021 | புதவி விலகல் |
| 2. | திருவாட்டி. கே.என்.விஜயசேகர | செய்முறை விரிவுரையாளர் (தற்காலிகம்) | 19-04-2021 | 14-09-2021 | பதவி விலகல் |
| 3. | திரு A.S.W.விஜயவர்த்தன | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 01-09-2014 | 30-11-2021 | தகுதிகாண் காலத்தின் பின்பு சேவை நிறுத்தப்படடது |
| 4. | திரு.S.P.S.G. தயானந்த | செய்முறை விரிவுரையாளர் (தற்காலிகம்) | 02-10-2020 | 30/11/2021 | பதவி விலகல் |
| 5. | திருவாட்டி.H.M.I.S.K.ஹேரத் | திட்ட அலுவலர் | 21-04-2021 | 31-12-2021 | பதவி விலகல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | திரு. I.N.பெதுறுஹேவா | உதவிப்பதிவாளர் | 23-07-2012 | 31/12/2021 | பதவி விலகல் |
| 7. | திருவாடடி..L.K.N.D.பெர்ணாந்து | செய்முறை விரிவுரையாளர் (தற்காலிகம்) | 14/09/2021 | 31/12/2021 | ஒப்பந்தகால பூர்த்தி |
| 8. | திரு.M.J.R.டேவிட் | ஆலோசகர் | 01/04/2019 | 31/10/2021 | ஒப்பந்தகால பூர்த்தி |




உருவம் - 12.2 - பதவி விலகல்கள் / ஒப்பந்த முடிவுறுத்தல்கள் சுருக்கம்

## 12.3 உள்ளக பதவி உயர்வுகள்

பல்கலைக்பழகத்தின் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைவாக பரிந்துரைக்கப்பட்ட முதுகலைப் பட்டப்படிப்பினை நிறைறேற்றியதன் மூலமாக ஐந்து (5) பணியாளர்களுக்கு அவர்களுடைய அடுத்த தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இதன் சுருக்கம் அட்டவணை 03 இல் தரப்பட்டுள்ளது:

அட்டவணை 12.3 - உள்ளக பதவி உயர்வுகள்

| # | பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 1 | திரு.R.R.M.D.P.ரட்நாயகா | சிரேஸ்ட விரிவுரையாளர் II | 01-09-2019 |
| 2 | திருவாட்டி.S.R.M.P.செனவிரட்ண | சிரேஸ்ட விரிவுரையாளர் II | 01-02-2019 |
| 3 | திருவாட்டி..A.A.குணவர்த்தன | சிரேஸ்ட விரிவுரையாளர் II | 10-12-2019 |
| 4 | திருவாட்டி.J.A.M.B.கருணாரத்ன | சிரேஸ்ட விரிவுரையாளர் II | 27-07-2019 |
| 5 | எந்திரி.D.T.கனெகொட | விரிவுரையாளர் | 31-07-2019 |

## 12.4 மனிதவள மேம்பாடு

பல்கலைக்கழகத்தின் வெற்றிக்கு அதன் ஊழியர்களே அடிப்படை என்பதை அங்கீகரித்துள்ளது. ஊழியர்களின் மேம்பாட்டிற்கான ஒரு மூலோபாய தொழில்சார் அணுகுமுறை பல்கலைக்கழகத்தினை ஈர்க்கவும் அதன் உயர்வினையும் தக்க வைக்க உதவும் கொவிட் தொற்று நோய் பரவலுடன் ஏற்பட்ட இடையூறுகள் இருந்தபோதிலும், பல்கலைக்கழகம் அதன் ஊழியர்களுக்கு பயிற்சி திட்டத்தினை வழங்கக்கூடியதாக இருந்தது.

அட்டவனை 12.4: 2021 ஆண்டுக்குரிய பயிற்சி திட்டங்கள்

| | **பணியாளர்கள் தெகையின் வகை** | **பயிற்சியின் பெயர்** | **பங்குபற்றியோர் பெயர்கள்** | **கால எல்லை** |
|---|---|---|---|---|
| 1. | கல்வியாளர்கள் | தேசிய டிஜிட்டல் கல்விக் கொள்கை மேம்பாட்டு ஆலோசனை பயிற்சி பட்டறை | திரு.S.A. லியனகே | 02 |
| 2 | கனிஷ்ட நிறைவேற்று அதிகாரிகள் | செயல்திறன் மேலாண்மை தொழில்முறை நோக்கம் | திருவாட்டி I.N.பெதுறுஹேவா | 5 நாட்கள் (2 மணித்தியாலங்கள் ஒவ்வொரு நாளும்) |
| 3 | எழுதுனர் தரங்கள் | ஸ்தாபன நடைமுறைகள் | திருவாட்டி.A.S.W விக்கிரமசிங்க | ஒரு நாள் |
| | | செயலாளர் மேம்பாட்டுத் திட்டம் | திருவாட்டி.N.K.மேப்பஹமஹே | நான்கு நாட்கள் |
| | | | திருவாட்டி .S.W. சம்பிக்க | |
| | | | திருவாட்டி.U.M.சிறிவர்த்தன | |

# 13 நிர்வாகப் பிரிவும் அதன் கடமைகளும்

நிர்வாகப் பிரிவானது பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின்கீழ் உதவிப் பதிவாளரின் (நிர்வாகம்) உதவியுடன் பல்கலைக்கழகத்தின் சீரான செயற்பாட்டை உறுதி செய்யும் வகையில் செயற்படுத்தப்படுகிறது. பொது நிர்வாகப் பிரிவு பின்வரும் துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- நிர்வாக பிரிவு
- போக்குவரத்து பிரிவு
- பராமரிப்பு பிரிவு
- பாதுகாப்பு சேவை
- துப்புரவுச் சேவை

## 13.1 உப பிரிவுகள்

### 13.1.1 போக்குவரத்து பிரிவு

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு மாணவர்களினதும் பணியாளர்களினதும் உத்தியோகபூர்வ போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. போக்குவரத்துப் பிரிவின் தொடர்ச்சியான சேவையை உறுதி செய்யும் வகையில் பொறுப்பதிகாரி ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளதோடு 04 பேர் கொண்ட சாரதி குழாமும் காணப்படுகின்றது.. அனைத்து வாகனங்களும் உரிய கொள்முதல் நடைமுறையினைப் பின்பற்றி GPS கண்காணிப்பு அமைப்படன் இணைக்கப்பட்டள்ளன மற்றும் பல்கலைக்கழகத்திற்கு உயர்தர தரத்திலான பயனுள்ள சேவையினை வழங்குவதே இதனுடைய நோக்கமாகும்.

### 13.1.2 துப்புரவுச் சேவை

பல்கலைக்கழகத்தின் துப்புரவு சேவைகள் முறையான விலைகூறல் நடைமுறையைப் பின்பற்றி, ஒரு வெளி மனிதவளச் சேவை நிறுவனத்தால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துப்புரவுச் சேவை ஊழியர்கள் பல்கலைக்கழகத்தைச் சிறந்த முறையில் சுத்தம் செய்வதோடு பூந்தோட்டங்களையும் நன்கு பராமரிக்கிறார். மேலும், நிர்வாகப் பிரிவு அனைத்து சுகாதாரப் பணிகளும் வழக்கமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என கிரமமான ஆய்வுகளை மாதந்தோறும் மேற்கொள்வதோடு ஒரு மாதத்தில் செய்யப்பட்ட பணிகளை முழுமையாகப் பகுப்பாய்வு செய்த பிறகு கொடுப்பனவுகளுக்கான புள்ளிகள் வழங்கப்படும். இதன் மூலம் பல்கலைக்கழகத்தின் சுகாதார வசதிகளை முறையாக பராமரிக்க முடியும்.

### 13.1.3 பாதுகாப்பு

பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புச் சேவைகள் முறையான விலைகூறல் நடைமுறையைப் பின்பற்றி ஒரு வெளி மனிதவளச் சேவை நிறுவனத்தால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் 17 பகல்நேரக் கடமைக்கான பாதுகாப்பு ஊழியர்களும் 16 இரவுநேரக் கடமைக்கான பாதுகாப்பு ஊழியர்களும் காணப்படுகின்றனர். பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 2011ஆம் ஆண்டு முதல் கண்காணிப்புக் கமரா அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பாதுகாப்பு ஊழியர்களுக்கு பாதுகாப்புத் திட்டத்தின்படி கடமைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக, ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடையே

கொவிட் தொற்று உருவாகுவதைத் தடுக்கும் வகையில் பல்கலைக்கழகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் மற்றம் பிரதான கட்டிடங்களில் சுகாதார வழிகாட்டல்கள் காட்சிப்படுத்தப்பட்டன. பல்கலைக்கழகத்தில் நுழைவோரின் வெப்பநிலையினைக் கண்டறிவதற்காக பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வெப்பமானிகள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகவளாகத்திற்கு வருகை தரும் அனைவரும் நிரப்பும் வகையில் ஒரு சுய வெளிப்படுத்தல் படிவம் பாதுகாவலர்களின் அறையில் வைக்கப்பட்டுள்ளன.

#### 13.1.4 பராமரிப்புப் பிரிவு

பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கட்டுமானப் பணிகளும் அவற்றின் பராமரிப்பும் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டுதலின்கீழ் பராமரிப்புப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறன. பராமரிப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட மூலதனப் பணிகள் பற்றிய சுருக்க விவரம் பின்வருமாறு.

### 13.2 மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல்

#### 13.2.1 அறிமுகம்

2021 ஆம் ஆண்டு பரிசீலனைக்குட்பட்ட பராமரிப்புப் பிரிவின் பணிகள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

I. தற்போதைய கட்டுமான திட்டங்கள்2017இல் தொடங்கப்பட்டன

அ. மிகுதி வேலை வடிவமைப்பு மற்றும் ஸ்டுயோ (Studio) மற்றும் வகுப்பறைகள் வளாகத்தின் கட்டுமானம் -

நிதி முதலீடு ரூ.7.5 மில்லியன்

II. தற்போது நடைமுறையிலுள்ள கட்டுமானத் திட்டங்கள் 2019இல் தொடங்கப்பட்டன

அ. வளாக கட்டிடத்தினைப் புதுப்பித்தல் நிதி முதலீடு ரூ13.97 மில்லியன்

III. தற்போது நடைமுறையிலுள்ள கட்டுமானத் திட்டங்கள் 2021இல் தொடங்கப்பட்டன

ஆ. 20 வளிசீராக்கிகளை (air conditioner) வழங்குதல்,நிறுவுதல் பரீட்சித்தல், மற்றும் நிறைவேற்றுதல்

நிதி முதலீடு ரூ3.73 மில்லியன்

IV. 2022இல் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் கட்டுமானத் திட்டங்கள்

அ. முன்மொழியப்பட்டள்ள மாணவர் விடுதி, பயிற்சி அறை மற்றும் தேநீர்சாலை

நிதி முதலீடு ரூ.927.34 மில்லியன்

குறிப்பு: கொவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பெரும்பாலான புதிய திட்டங்கள் தொடங்க முடியவில்லை மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்களையும் பூர்த்தி செய்ய முடியவில்லை.

## 14 மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள்

### 14.1 நிதி நிலைமைக் கூற்று

| மார்கழி 31 இல் உள்ளவாறு | குறிப்பு | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவையும் | 2 | 18,714,869 | 25,755,746 |
| முற்பணங்கள், பெறவேண்டிய வைப்புக்கள் | 3 | 252,460 | 177,420 |
| இருப்புக்கள் | | 4,331,186 | 4,645,719 |
| முற்பணங்கள் | 4 | 1,211,187 | 1,315,466 |
| உத்தியோகத்தர் கடன்களும் முற்பணங்களும் | 5 | **6,894,713** | 6,593,810 |
| கடன்பட்டவர்களும் ஏனைய பெறவேண்டியவைகளும் | 6 | 5,898,712 | 1,723,246 |
| | | **37,303,127** | **40,211,407** |
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | |
| முதலீடுகள் | 7 | 67,807,126 | 59,532,333 |
| ஆதனங்கள்,பொறி மற்றும் உபகரணங்கள் | 8 | 1,228,371,030 | 1,316,527,561 |
| நடைபெற்றுவரும் வேலைகள் - கட்டடம் | 9 | 330,624,193 | 358,364,573 |
| பார்க்கமுடியாத சொத்துக்கள் | 10 | 1,046,564 | 1,681,320 |
| | | **1,627,848,913** | **1,706,105,787** |
| **மொத்தச்சொத்துக்கள்** | | **1,665,152,040** | **1,746,317,194** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 11 | 32,971,517 | 31,012,126 |
| செலுத்த வேண்டிய குறுங்கால வைப்புக்கள் | 12 | 9,270,200 | 6,553,850 |
| குத்தகைக் கடப்பாடுகள் | 13 | 2,494,894 | 2,213,157 |
| | | **44,736,611** | **39,779,133** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 14 | 110,514,814 | 99,883,764 |
| செலுத்த வேண்டிய நீண்டகால வைப்புக்கள் | 15 | 44,345,000 | 40,601,000 |
| குத்தகைக் கடப்பாடுகள் | 16 | 4,087,550 | 6,582,444 |
| | | **158,947,364** | **147,067,208** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **203,683,975** | **186,846,341** |
| | | | |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **1,461,468,065** | **1,559,470,853** |
| | | | |
| **தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனம்** | | | |
| மூலதனக் கொடை | 17 | 1,524,190,932 | 1,607,737,816 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 27,837,891 | 28,639,667 |
| திரண்ட நிதியம் | 18 | (91,180,070) | (77,525,942) |
| ஏனைய நிதியங்கள் | 19 | 619,312 | 619,312 |
| **மொத்த தேறிய சொத்து /உரிமை** | | **1,461,468,065** | **1,559,470,853** |

கணக்கியல் கொள்கைகள் பக்கங்கள் 6-10 வரையானதும் 11 தொடக்கம 23 வரையான குறிப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் அவசியமான பகுதியாக இருக்கின்றன.

தயாரிப்பு

...................................

ஜி ஏ ஏ டில்றுக்சி
உதவிக் காசாளர்

**உறுதிப்படுத்தல்**

நாங்கள் மேலேயுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையானவை எனவும் 31.12.2021 இல் மிகை / பற்றாக்குறை என உறுதிப்படுத்துகின்றோம்.

................................ ................................

Prof ரஞ்சித் பிறேமலால் டி சில்வா — A.P அலுத்கே
தகுதிவாய்ந்த ஆணையம் — நிதிப்பணிப்பாளர்

ஆளுனர் சபை நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் வெளிப்பாடுகளுக்கு பொறுப்பாக இருப்பதுடன் அவர்களினால் அனுமதியளிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையப்பமிடப்பட்டடுள்ளது.

........................................ ................................

சந்திரரத்தின விதானகே — சனத் பனவென்னகே
அங்கத்தவர் — அங்கத்தவர்
கொழும்பு
24 மாசி 2022

## 14.2 நிதிச்செயற்றிறன் கூற்று

| மார்கழி 31 இல் உள்ளவாறு | குறிப்பு | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | | |
| மீண்டெழும் மானியம் | | 341,350,000 | 341,865,455 |
| உத்தியோகத்தர் அபிவிருத்தி கொடை | | 73,650 | 131,500 |
| திறன்கள் துறை அபிவிருத்தி கொடை | 20 | 3,707,273 | 6,033,936 |
